1984 மார்ச் 29]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, தீர்மானத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எனக்கு நேராக அனுப்பினால் அதைப் பரிசீலனை செய்வதற்குச் சிரமம் ஏற்பட்டுவிடும். அந்தப் பேரூராட்சி மூலமே ப்ராப்பர் சானல் வழி அனுப்ப வேண்டும். அதைப் பெற்று தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஈ. எஸ். ஐ. மருத்துவ வசதியைக் கட்டிடத் தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தும் திட்டம்.

502—(* வினா எண். 19762)—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதியைக் கட்டிட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தித் தரும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இல்லை. ஆனால் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வகை விதித் துறைகள்) மசோதாவின் பிரிவு 40(8) இன்படி அரசு அறிக்கை ஒன்றை வெளியிடுவதன் மூலம் 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு காப்புறுதிச் சட்டம் (மத்திய சட்டம் 34/1948) கட்டட கட்டுமானப் பணியாளர்களுக்குப் பொருந்தச் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ‘ இல்லை ’ என்று சொன்னார்கள். பிறகு வகை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் இந்த வகை எப்போது செய்யப்படும் ? அது எப்போது எந்த வகையில் முடியும் ? எந்த மாநிலத்திலாவது இந்த வகை இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி, ‘ ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதியைக் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தித் தரும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ? ’ என்பதாகும். அப்படி இல்லை. ஆனால் இந்த அரசாங்கம் ஒரு சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்தியிருக்கிறது, கட்டட கட்டுமானத் தொழிலாளர்களுக்காக. அது இந்தச் சட்ட மன்றத் தொடர் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் இந்த ஈ.எஸ்.ஐ. வசதியை எக்ஸ்டென்ட் செய்வதற்கு வேண்டிய

[1984 மார்ச் 29

அதிகாரம் பெறுவதற்கு இந்தச் சட்ட முன்வடிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டமுன்வடிவு நிறைவேறிய பின், சட்டம் அமலுக்கு வந்தபின் எந்தெந்தப் பகுதிக்கு இதைச் செயல்படுத்த வேண்டும் என்ற முறையில், நிதி ஆதாரம் இதை யெல்லாம் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படும். இப்படி ஒரு சட்ட முன்வடிவு — இந்தியாவிலே கட்டட கட்டுமானப் பணியாளர்கள் பல்வகை விதித்துறைகள் சட்ட முன்வடிவு இந்தியாவிலேயே முதன் முதலாக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது; நிறைவேற்றப்படவும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இந்த மருத்துவ வசதி செய்து கொடுப்பதுபோல் தினந்தோறும் காலையிலிருந்து மாலை வரை வேலைபார்க்கிற உழைக்கும் வர்க்கமான மூட்டை தூக்குவோர், சென்னை கடற்கரையில் காலையிலிருந்து மாலை வரை சுண்டல் விற்போர், செருப்புத் தைக்கும் தொழிலாளிகள், கைவண்டி இழுப்போர், ஜவுளிக் கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கும் இந்தச் சட்டமுன்வடிவில் வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இதற்கு என்று சென்ட்ரலில் ஒரு கமிட்டி இருக்கிறது. தமிழ் நாட்டிலும் ஒரு கமிட்டி இருக்கிறது. சில செலவுகளை ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் ஏற்றுக் கொள்கிறது. சில செலவுகள் 1 : 7 என்ற வகையில் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. எனவே எந்தெந்தத் துறைகளில் செயல்படுத்த முடியும் என்று பரிசீலனை செய்து தமிழக அரசினுடைய நிதி ஆதாரத்தை மனதில் கொண்டு அவ்வப்போது விரிவாக்கப்படுகிறது. அது தொடர்ந்து விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடங்கள் கட்டும் தொழிலாளர்கள் ஏராளமான பேர்கள், லட்சக்கணக்கான பேர்கள் தனியார் துறையில் மட்டுமல்லாமல், அரசுத் துறையிலும் கூட இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கான்ட்ராக்டர்களுக்குக் கீழ் கட்டுப்பட்ட ஊழியர்களாக இருக்கின்றார்கள். இந்த ஈ. எஸ். ஐ. ஸ்கீமை விஸ்தரிப்பது என்பது புதியதாக கொண்டுவரக்கூடிய சட்டம் என்று சொன்னாலும் கூட, குறிப்பிட்ட ஏரியாக்களுக்கு என்று இருக்க முடியுமே தவிர, சகல இடங்களிலும் உள்ள கட்டிடத் தொழிலாளர்களுக்கு விஸ்தரிக்க முடியாது. ஆகவே, அடிமட்டத்திலே இருக்கக்கூடிய லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஒரு மெடிகல் ஸ்கீம், ஒரு மருத்துவ வசதி பிரத்தியேகமாக கொடுப்பதற்கு ஏதாவது ஒரு திட்டத்தை அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 29]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொன்னேன். எனக்குத் தெரிந்தவரையில் இந்தியாவில் தமிழக அரசுதான் முதன்முதலாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறது. வேறு மாநிலத்தில், நான் விசாரித்த வரையில் இல்லை. எங்காவது இருக்குமா என்பது எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்த வரையில் தமிழகத்திலேதான் கொண்டு வருகிறோம். ஈ. எஸ். ஐ. திட்டத்தை விரிவுபடுத்துவது, ஆர்கனைஸ்ட் லேபரர்களுக்குகூட விரிவாக்குவது என்பது ஏரியா ஏரியாவாகத் தான் நாம் விரிவாக்கிக் கொண்டு வருகிறோம். அதைப்போல இந்தத் தொழிலாளர்களுக்கும் விரிவாக்குவதற்கு வேண்டிய 'எனேபிளிங் மெஷர்ஸ்' அந்த அதிகாரத்தைப் பெறக்கூடிய அளவிலே இந்தச் சட்டத்திலே வகை செய்திருக்கிறோம். அதைப் பெற்ற பிறகு, எங்கெங்கே எப்போது விரிவாக்கலாம் என்பதைப் பார்த்து செயல்படுத்தப்படும். இந்தச் சட்ட முன்வடிவு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசயிருக்கிறார்கள். அப்போது நாம் இதைப்பற்றி விரிவாகப் பேசலாம்.

கோவையில் காலியாக உள்ள தொழிலாளர் நல அதிகாரிகளின் பதவிகள்.

503 —(*வினா எண் 21481)—**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் 6 மாத காலமாகத் தொழிலாளர் நல அதிகாரிகள் மூன்று பேர் இல்லாமல் வழக்குகள் தேங்கிக் கிடப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், காலியாக உள்ள இடங்களைப் பூர்த்தி செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கோவையில், 3 பதவிகள், ஆறு மாதங்களுக்கு மேலாக காலியாக இருந்தன என்பதும், தொழிற் தகராறு வழக்குகள் குவிந்து விட்டன என்பதும் அவ்வளவு சரியில்லை. இம்மூன்று பதவிகளும், 4–லிருந்து 5 மாதங்கள் வரையில் மட்டுமே அலுவலர்களது பதவி ஓய்வு மற்றும் பதவி மாற்றம் காரணமாக காலியாக இருந்தன. இப்பதவிகளை மற்ற அலுவலர்கள் முழுக்கூடுதல் பொறுப்பு வகித்து பணியாற்றி வந்தும், தொழிற் தகராறு வழக்குகள் நிலுவை கணிசமாக அதிகரிக்கவில்லை.

(ஆ) இப் பணியிடங்கள் யாவும் தற்போது நிரப்பப்பட்டு விட்டன.